முக்கிய வார்த்தைகள்:
ஒருமைப்பாடு
சமய அறிவு
சரிபார்ப்பு

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**24 ஜூலை 2026 / 09 ஸஃபர் ஹிஜிரி 1448**

# நமது மார்க்க வாழ்க்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى: يَاأَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

முழுமையான விழிப்புணர்வுடன் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக: அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோமாக; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக; எல்லாம் வல்ல அல்லாஹ், நாம் அனைவரும் நேர்வழியில் நிலைத்து நிற்பதற்கு வழிகாட்டுதலையும் அறிவு ஞானத்தையும் நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

மார்க்க வாழ்க்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுக்காப்பதற்கு இஸ்லாம் மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. மார்க்க அறிவைக் கையாளும் போது எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் நடந்து கொள்ளும் மனப்பான்மையை

இது குறிக்கிறது. மார்க்க அறிவின் மூலம் அல்லாஹ்வின் கட்டளைகளையும் அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களையும் மற்றும் வழிகாட்டுதல்களையும் நாம் புரிந்து கொள்கிறோம்; அவையே, நமது மார்க்க வாழ்க்கையின் அடையாளத்தை வடிமைக்கின்றன்.

உண்மைத்தன்மையைக் குறித்து நமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தும் எந்த ஒரு அறிவும் மார்க்கத்தின் பெயரால் பரப்பப்பட்டால், அது மிகவும் ஆபத்தானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, திருக்குர்ஆனுடைய வசனங்களின் சூழலைக் கவனத்தில் கொள்ளாமல் அவற்றுக்குத் தன்னிச்சையாகப் பொருள் கூறுவது, இட்டுக்கப்பட்ட ஹதீதுகளின் அடிப்படையில் ஒரு செயலைச் செய்வது அல்லது ஒன்றை நம்புவது ஆகிய அனைத்தும், பிற்காலத்தில் நடைமுறைகளாக மாறிவிடுகின்ற நம்பிக்கைகளை உருவாக்கி விடும். காலப் போக்கில், இந்தப் பழக்கங்கள் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக மாறக் கூடும்; ஆனால் உண்மையில் அவை இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையல்ல.

நிஜ உலகிலோ, இணையத்திலோ உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இந்த ஆபத்து நமது வாழ்க்கையில் பெருகிப் பரவி வருவதை உணர்ந்து, நமது சமய வாழ்க்கையைப் பேணிப் பாதுகாக்க உதவும் மூன்று வழிகாட்டுதல்களை இந்தச் சொற்பொழிவு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது.

**முதலாவதாக: மார்க்க அறிவின் ஆதாரங்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருத்தல்**

சகோதரர்களே! நாம் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதற்கு மருத்துவர்களிடமும் சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கு வழக்கறிஞர்களிடமும் செல்கிறோம்; எந்த ஒரு மருத்துவரையோ அல்லது வழக்கறிஞரையோ சந்திக்கும் போது, அவர்களில் சிறந்தவரைக் கண்டறிய நாம் விரும்புகிறோம். மார்க்கக் கல்வி விஷயத்திலும் இதே அணுகுமுறையை நாம் கையாள வேண்டும்; காரணம், அது இவ்வுலகிலும்

மறு உலகிலும் அல்லாஹ்விடம் நமது தகுதியைத் தீர்மானிக்கும் ஒரு விஷயமாகும்.

இமாம் இப்னு ஸீரீன் [ரஹ்] அவர்கள் கூறியுள்ளார்கள்: "நிச்சயமாக, நம்மிடம் காணப்படும் மார்க்கக் கல்வி தான், நமது மார்க்கமாகும்; எனவே, நீங்கள் யாரிடமிருந்து உங்கள் மார்க்கத்தைப் பெறுகிறீர்கள் என்பதைக் கவனமாகப் பாருங்கள்"

நாம் பெறுகின்ற மார்க்க அறிவின் மூலங்களை கூர்ந்து ஆராய வேண்டும் என்பதற்கு இமாம் இப்னு ஸீரீன் அவர்களின் இக்கூற்று ஒரு நினைவூட்டலாகும். இதன் பொருள், இஸ்லாம் குறித்த நமது புரிதலானது, முறையான, தகுதியுடைய, நல்ல நம்பகத்தன்மையைக் கொண்ட, பணிவைக் கடைப்பிடிக்கின்ற, தங்களின் போதனைகள் மற்றும் அழைப்புடன் செயல்கள் ஒத்துப் போகின்ற ஆசிரியர்களால் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

**இரண்டாவதாக: மார்க்க அறிவின் உள்ளடக்கதைச் சரிபார்த்தல்**

சகோதரர்களே! நாம் நமது மார்க்கத்தின் ஆதாரங்களை மற்றும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருந்தாலும், ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நாம் பெறுகின்ற கல்வியறிவின் நம்பகத்தன்மையைச் சரிபார்ப்பதிலும் மிகுந்த நன்மை உள்ளது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-இஸ்றா" எனும் அத்தியாயத்தின் 36-வது வசனத்தில் கூறுகிறான்:

وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِۦ عِلْمٌ ۚ إِنَّ ٱلسَّمْعَ وَٱلْبَصَرَ وَٱلْفُؤَادَ كُلُّ أُو۟لَـٰٓئِكَ
كَانَ عَنْهُ مَسْـُٔولًا ٣٦

பொருள்: "எதைப் பற்றி உங்களுக்குத் [தீர்ககமான] ஞானமில்லையோ அதைச் [செய்யத்] தொடர வேண்டாம்; நிச்சயமாக [மறுமையில்] செவிப்புலனும், பார்வையும், இருதயமும், இவை ஒவ்வொன்றுமே [அதனதன் செயல்களைப் பற்றி] கேள்வி கேட்கப்படும்"

அன்புச் சகோதரர்களே! மார்க்க அறிவின் உள்ளடகத்தைச் சரிபாப்பதில் பல படித்தரங்கள் உள்ளன. எந்த ஒரு கல்வியறிவாக இருந்தாலும் அல்லது மத சம்பந்தமான உள்ளடக்கமாக இருந்தாலும், அவற்றுக்கு வலுவான அடிப்படை உள்ளதா என்பதை நாம் சரிபார்க்க வேண்டும். எனவே, மத அடிப்படை விஷயங்கள் மற்றும் சான்றுகள் நம்பகமானவை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்; காரணம், மார்க்க அறிவின் ஒவ்வொரு துணுக்கும் மார்க்கத்தின் சான்றுகளில் வேரூன்றியிருக்க வேண்டும். அந்த அடிப்படையானது, அதன் உண்மையான நோக்கத்திற்கேற்பப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் நாம் சரிபார்க்க வேண்டும்.

**மூன்றாவதாக: பிக்ஹ் எனப்படும் இஸ்லாமிய சட்ட விளக்கங்களின் உபயோகம் சூழலுக்குக் கேற்ப மாறக் கூடும் என்பதை அறிதல்**

சகோதரர்களே! *"lain padang, lain belalang"*–என்று ஒரு மலாய் பழமொழி உண்டு. அதன் பொருள்: "வெவ்வேறு இடங்களுக்கு வெவ்வேறு சூழ்நிலைகள் உண்டு" என்பதாகும். ஃபிக்ஹ் எனப்படும் இஸ்லாமிய சட்ட தீர்ப்புகளுக்கும் இதுவே பொருந்தும். ஐந்து நேரத் தொழுகைகள் போன்ற இஸ்லாமிய சட்ட விளக்கத்தில் உள்ள பல அடிப்படை அல்லது மைய விஷயங்கள் [உசூல்] என்றும் மாறுவதில்லை என்பது உண்மை தான். எனினும், சூழலுக்கேற்ப மாறுகின்ற கிளை அல்லது இரண்டாம் நிலை [ஃபுரூஃ] தீர்ப்புகளும் உள்ளன என்பதை நாம் அறிய வேண்டும்.

உதாரணமாக, திருமண நன்கொடை அல்லது மஹ்ர் மித்ல் என்பதின் குறைந்த பட்சத் தொகை, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மாறுபடுகிறது; இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பொருளாதார யதார்த்தங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் நடைமுறைகளில் உள்ள வேறுபாடுகளின் காரணமாக, ஒரு நாட்டு மக்கள், அண்டை நாட்டின் மஹ்ர் மித்ல் விகிதத்தை ஏற்றுக் கொண்டு, தங்கள் நாட்டில் அதனைப் பயன்படுத்துவது பொருத்தமானதாக இருக்காது.

இதன் மூலம், மார்க்கத்தின் கிளை விஷயங்கள் தொடர்பான ஃபிக்ஹ் தீர்ப்புகள், இடம், காலம் அல்லது உள்ளூர் மக்களின் பழக்கவழகங்கள் போன்ற சூழல்களால் மாறுபடலாம் என்பது புலனாகிறது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மார்க்க அறிஞர்கள், திருக்குர்ஆன், ஹதீது ஆகிய மூலங்களையே மேற்கோள் காட்டினாலும், அவர்களின் தீர்ப்புகளிலும் ஃபிக்ஹ் சம்பந்தமான கருத்துக்களிலும் வேறுபாடுகள் காணப்படுவதற்கு இதுவும் காரணமாகும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

நம்பகமான ஆதாரங்களைச் சார்ந்து, நமது மார்க்க வாழ்வின் தூய்மையை நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாப்போமாக; ஏனெனில், இன்று நமது மார்க்க வாழ்வின் தூய்மைதான், நாளை அல்லாஹ்விடம் நமது நிலையைத் தீர்மானிக்கும்.

நாம் பெறுகின்ற ஒவ்வொரு கல்வியறிவும் அந்தக் கல்வியறிவின் அடிப்படையில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், நாளை மஹ்ஷர் மைதானத்தில் நாம் அல்லாஹ்வின் முன்பாக நிற்கும் போது நமக்கான வாழ்வாதாரமாக அமையும். எனவே, நாம் கற்கும் கல்வியறிவும் நாம் செய்யும் செயல்களும் நம்மால் இயன்ற வரை உண்மையானவையாகவும் நம்பகமானவையாகவும் இருப்பதை உறுதி செய்வோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு சத்தியத்தின் பாதையைக் காட்டுவாயாக! அதனைப் பின்பற்றுவதற்கான ஆற்றலை எங்களுக்கு வழங்குவாயாக! மேலும் அறியாமை மற்றும் அலட்சியங்களிலிருந்து எங்களைப் பாதுகாப்பாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيز: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَموَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِين وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا

أَرْحَم الرَّاحِمِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حسَنَةً، وَفِي الآخِرَة حَسَنَةً، وَقنا عَذابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.